இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 24.08.2016

## மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29 °செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (24.08.2016 முதல் 28.08.2016)

### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 27 மற்றும் 28 ம் தேதிகளில் மட்டும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 62 முதல் 68 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் முன்பட்ட கரும்பிற்கும், 5 மாதத்திற்கு மேலான வாழைக்கும் முட்டு கொடுக்கவும்.
- காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதை முறையாக கையாளவும்.
- அடுத்த 3 நாட்களுக்கு வறண்ட வானிலை காணப்படுவதால் அறுவடை செய்ய கடலையினை நன்கு காயவைத்து சேமிக்கவும்.
- காற்றின் வேகம் மற்றும் மேகமூட்டம் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க தேவையான அளவு குடிநீர் கொடுக்கவும்

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடனும் காணப்டும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 36°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செ முதல் 29°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 35 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 கி.மீ முதல் 17 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலை சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி.,ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்துள் 400 கிராம்,ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

- ✓ *சம்பா நாற்றங்கால் தயார் செய்ய ஏக்கருக்கு 8 சென்ட் பாத்தியில் 400 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கலந்து இடவேண்டும். சம்பா நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 1 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவேண்டும்.*
- ✓ *நேரடி விதைப்பு செய்த சேற்று வயல்களில் பயிர் முளைத்த 3-4 தினங்களுக்குள் பிரிடிலாக்குளோர் ரூ சேப்னர் ஏக்கருக்கு 500 மி.லி. என்ற அளவில் தெளித்துக் களைகளைக் கட்டுப்படுத்தவும்.*
- ✓ *முன்பட்ட சம்பாவிற்கு சி.ஆர். 1009 மற்றும் ஆடுதுறை 50 என்ற இரகங்களை நாற்றுவிட சிபாரிசு செய்யப்படுகிறது.*

**3. தெற்கு மண்டலம் -1**

*தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படவும், வறண்ட வானிலை நிலவும் எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 35°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 43 முதல் 89 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 முதல் 16 கி.மீவேகத்தில˙வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ நாற்று பருவத்திலுள்ள நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் மற்றும் இலைச் சுருட்டுப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. தண்டுத்துளைப்பானை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் என்ற முட்டை ஒட்டுண்ணியையும் இலைச்சுருட்டுப்புழுவினை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா சிலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியையும் 100இ000, எக்டர் என்ற அளவில் 3 முறை பயன்படுத்தவும். பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் 1 கிலோ, எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் மல்லிகையில் மொட்டுப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் 2 மி.லி., லிட்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் முருங்கையில் இலைப்புழுவின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த மரத்தை சுற்றி உழவு செய்து மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை வெளிக்கொணர்ந்து அழிக்கவும். பாதிக்கப்பட்ட பூ மொக்குகள் மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்கவும்.•விளக்கு பொறி எக்டருக்கு ஒன்று வீதம் அமைக்கவும். (அல்லது)கார்பரில் *50 று ஃ 1* கிராம், லிட்டர் அல்லது மாலத்தியான் *50 நுஊ ஃ 2* மி.லி., லிட்டர் தெளிக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படவும், வறண்ட வானிலை நிலவவும் எதிர்பார்க்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் மட்டும் இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 25°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 35°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 20°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 26°செ முதல 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 47 முதல் 87 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 9 முதல் 17 கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ காற்றின் வேகம் 16 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் 5மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ கொட்டகையின் மேற் பகுதியில் வைக்கோல் அல்லது தெனன்ங்கீத்து பரப்புவதன்மூலம் வெப்ப தாக்கத்தின் அளவை குறைத்து கொட்டகையின் உட்புறம் குளுமையாக வைத்து கொள்ளலாம்.
- ✓ குறுவை நெற்பயிரில் தூர்கட்டும் பருவத்தில் 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 25 கிலோ யூரியாவையும் சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.
- ✓ நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மி.லி / ஏக்கர் அல்லது நனையும் கந்தகததூள் 400 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 18° செ முதல் 19° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 88 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் மூன்று நாட்ளுக்கு பிறகு மிதமான மழை வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.
- ✓ வாழை கண்றுகள் பயிரிடும் போது கண்று ஒன்றுக்கு 10 கிலோ தொழு உரம், 250 கிராம்வேப்பம் புண்ணாக்கு, 25 கிராம் ட்ரைகோடெர்மா, 25 கிராம் சூடோமோனஸ் இட்டு நடவும்.
- ✓ வெள்ளை பூண்டில் அறுவடையின் போது ரப்பராகும் நிகழ்வை தடுக்க, யூரியா உரத்தைதவிர்த்து அமோனியம் சல்பேட் இடவேண்டும்.
- ✓ தோட்டக்கலைப் பயிர்களில் சாம்பல் நிற வண்டின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. கட்டுப்படுத்த, பாசலோன் 35சதவீத மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, 1.5 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ மிளகு கொடியில் ஆகஸ்ட் மாதத்தில், இலைகளின் மீது, ஒரு சதவீத டிஏபி கரைசலைதெளிப்பதன் மூலம், மிளகு பிஞ்சு உதிர்தலை தவிர்த்து அதிக விளைச்சலை பெறலாம். கூடலுர் பகுதியில், ஒரு பாக்கு மரத்திற்கு, 220 கிராம் யூரியா, 220 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 230 கிராம் பொட்டாஸ் உரம் இடலாம்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 7 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த முன்று நாட்களுக்கு வானிலையில் பகல் வெப்பம் 1°செ வரை உயர்வாகவும். காற்றின் வேகமும் குறைந்து காணப்படும். இத்தகைய வானிலையில் கோழிகளில் வெப்ப அயற்சி காணப்படும் வாய்ப்புள்ளது. மிதமான மழை இருக்குமிடங்களில் வெப்ப அயற்சி குறைய வாய்ப்புள்ளது. எனவே கோழிகளில் வெப்ப அயற்சியை குறைக்கும் வகையில் தீவனத்தில் வைட்டமின் சி மற்றும் எலக்ட்ரோலைட்ஸ் தாது உப்புக்களை சேர்த்து வருதல் வேண்டும். தீவன எடுப்பு குறைந்து காணப்படும் பண்ணைகளில் பகலில் தீவனம் கிளறுவதை தவிர்த்து மாலையில் தீவன எடுப்பைத் தூண்டும் வகையில் ஒரு மணி நேரம் செயற்கை ஒளியை சேர்த்து கொடுப்பதையும் மேற்க்கொள்ள வேண்டும்.
- ✓ தற்போது பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகசூலை பெருக்கவும் மற்றும் பயிர்கள் வறட்சியை தாங்கி வளரவும் பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட ஃபருத்தி ப்ளஸ்ஃ என்ற ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலவையை ஏக்கருக்கு 2.5 கிலோ என்ற அளவில் இரண்டு முறை பூ மற்றும் காய் பிடிக்கும்போது தெளிக்க வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 52 மற்றும் 78 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 9 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ 27.08.2016 அன்று இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ கொட்டகையின் மேற் பகுதியில் வைக்கோல் அல்லது தென்னாங்கித்து பரப்புவதன் மூலம் வெப்ப தாக்கத்தின் அளவை குறைத்து கொட்டகையின் உட்புறம் குளுமையாக வைத்து கொள்ளலாம்.
- ✓ கோழிப் பண்ணைகளில் தண்ணீர் தோட்டி மற்றும் தண்ணீர் குழாய்களை கோனிப்பை கொண்டு முடுவதன் மூலம் கோழிகளுக்கு குளிர்ந்த குடிநீர் அளித்து வெப்பத் தாக்கத்தின் அளவை குறைக்கலாம்.
- ✓ கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதன் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.

- ✓ கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
- ✓ அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புள்ள பகுதிகளில் உழவர்கள் தங்களுடைய மாடு மற்றும் ஆடுகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

***7.அதிக மழை பெறும் மண்டலம்***

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை எதிர்பார்க்கப்படவில்லை பகல்நேர வெப்பநிலை 33° செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 24°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 70 முதல் 73 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண் அறிவுரை***

- ➢ *வரும் ஐந்து நாட்களில் பெரிய அளவு மழை பெய்ய வாய்ப்பில்லை.*
- ➢ *மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் இலவங்கப்பட்டை செடி, மரங்களில் மழை நீர் சேகரிக்க ஏதுவாக பாத்திகள் அமைக்கலாம்.*
- ➢ *வெப்பநிலை அதிகமாக இருப்பதால் காய்கறி பயிர்களுக்குபோதுமான அளவு நீர் பாய்ச்சவும்.*
- ➢ *பழ மரங்களில் வட்ட பாத்தியில் மூடாக்கு அமைக்கவும்.*
- ➢ *மிளகு வளரும் கொடிகளை தாங்கும் மரங்களுடன் கட்டிவிடவும்.*
- ➢ *காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும்.*

***பேராசிரியர் மற்றும் தலைவர்,***
***வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,***
***த.நா.வே.ப.கழகம்,கோவை.ள***